IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961.

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We will now proceed with the discussion on the Governor's Address.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னரின் உரையின் பேரில் நான்கு நாட்களாக இங்கே விவாதங்கள் நடைபெறுகின்றன. அநேக அங்கத்தினர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். முக்கியமாக ஆளும் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்கள்கூட அநேக குறைகளை சொல்லி கடைசியில் ஆதரித்துப் பேசி வந்தார்கள். பொதுவாகப் பார்க்கப் போனால் கவர்னருடைய உரையானது எல்லோருக்கும் ஒரு ஏமாற்றத்தை கொடுத்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக நமக்கு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவாயின. இப்போது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கும் கட்டத்தில் இருக்கிறோம். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 12 ஆயிரம் கோடி வரையில் செலவிடப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருக்க கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நாட்டில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அசெஸ்மெண்டு எடுத்திருக்கிறார்களா? பொருளாதாரத் துறையில் தமிழகம் எத்தனை சதவிகிதம் முன்னேறியிருக்கிறது? ப்ளான்கள் போடுவதற்கு முன்பு இருந்த நிலை என்ன? இப்போது எவ்வளவு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது? முன்பு இங்கு தனிப்பட்டவர்களுடைய வருமானம் என்னவாக இருந்தது? இப்போது எவ்வளவு உயர்ந்திருக்கிறது? அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எவ்வாறு உயர்ந்திருக்கிறது? இதைப் பற்றியெல்லாம் தெளிவாகக் கணக்கெடுத்திருக்கிறார்களா? எடுத்திருந்தால் அதை இங்கே சொல்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். ஒரு பக்கம் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்றாலும் மற்றொரு பக்கம் விஷம் போல் விலைவாசிகள்